## ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவதங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1:2:1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது அகற்றப்பட்ட ரூபா 2,701,868 கிரயமான மோட்டார் வாகனத்திற்காக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்ட காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 540,374 தொகையான பெறுமானத்தேய்வு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருந்த ரூபா 3,063,404 கிரயமான 06 மோட்டார் வாகனங்களும் ரூபா 267,000 கிரயமான 02 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) திறைசேரி அங்கீகாரம் இன்றி ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வழங்கப்படுவதற்காக அரச வங்கி ஒன்றில் 1993 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவ் வைப்பும் வட்டியும் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது விடுதி மற்றும் மாநாட்டு மண்டபத்திற்காக பெறவேண்டிய ரூபா 305,637 தொகையான வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக்கூற்றுக்களில் மூலதன மற்றும் ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 40,861,902 தொகையான மூலதன மானியம் தொடர்பாக காலக்கழிவு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 யூலை மாதத்தில் நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 1,118,919 தொகையான வாகனத்தின் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கீட்டு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 8,467,482 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்கு விடயம் | நிதிக்கூற்றுக் களின் படியான மீதி | பட்டோலை களின் படியான மீதி | நிலையான சொத்துப் பதிவேடுகளின் படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நுகர்வுப் பொருட்கள் | 1,903,599 | 1,778,999 | - | 124,600 |
| விற்பனை நிலையம் | 430,908 | 442,944 | - | 12,036 |
| கணனி உதிரிப்பாகங்கள் | 3,660,047 | - | 3,002,757 | 657,290 |
| மோட்டார் வாகனங்கள் | 26,648,157 | - | 20,472,629 | 6,175,528 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 15,820,259 | - | 14,322,231 | 1,498,028 |
| | | | | 8,467,482 |

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடன்கொடுத்தோரின் கீழ் 2009 ஆம் ஆண்டு முதல் நிலவும் செலுத்தப்படாத செலவினங்களான ரூபா 75,191 தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் யூன் மாதம் வரை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 74,634 தொகையான கொள்வனவு முற்பணமும் மீளாய்வாண்டின் மே மாதத்தின் போது 07 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 84,250 தொகையான போக்குவரத்துச் செலவின முற்பணங்களும் ஆண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களை பரீட்சிப்பதற்காக அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| கேள்வி வைப்புகள் | 255,285 | i. மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| | | ii. சேள்வி வைப்பு பட்டோலைகள் |
| இறுதி இருப்புகள் | 4,253,145 | i. இருப்புப் பதிவேடு |
| | | ii. மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| இலங்கை மின்சார சபை வைப்புகள் | 406,250 | i. வைப்புச் செய்வதற்கான காரணம் |
| | | ii. வைப்பிற்குரிய சான்றிதழ்கள் |
| கட்டிடங்கள் | 24,202,599 | i. மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| | | ii. நிலையான சொத்துக்கள் பதிவேடு |

| | | |
|---|---|---|
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 15,820,259 | மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் |
| கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் | 3,660,047 | |
| மோட்டார் வாகனங்கள் | 26,648,157 | |
| நூலகப் புத்தகங்கள் | 2,308,797 | |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1972 இன் 05 ஆம் இலக்க ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன அதிகாரச்சட்டம் | பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 21 பணிப்பாளர்களை பணிப்பாளர் சபையை கொண்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் பணிப்பாளர் சபை 19 பேரை உள்ளடக்கியிருந்தது. நிர்வாக சபைக்கு காணி அமைச்சு மற்றும் கிராமிய அபிவிருத்தி திணைக்களம் தொடர்பான துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை யின் 3.13 ஆம் பந்தி | வாகனங்களின் உட்பகுதி திருத்தப்படுவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விலைகளின் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத் துறையில் திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது சபையின் தகைமை |

| | |
|---|---|
| | பெற்ற இயந்திரப் பொறியியலாளரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் 08 வாகனங்களுக்குச் செலவிடப்பட்டிருந்த ரூபா 636,343 பெறுமதியான திருத்த வேலைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி கோவையின் 4.3.1, 5.4.4(1), 8.9.1 மற்றும் 8.12.2 ஆம் வழிகாட்டிகள் | பேல்வெஹர சுற்றுலா விடுதி ரூபா 1,362,354 செலவில் திருத்தப்பட்டிருந்ததுடன் அங்கு நிறுவகத்தினால் விலை மனுக்களும் செயற்பாட்டு பிணையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே நிறுவகத்திற்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிராததுடன் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு முற்பணம் மதிப்பிடப்பட்ட தொகையின் 20 சதவீதத்திற்கு மேற்படலாகாத போதிலும் மதிப்பிடப்பட்ட தொகையின் 51 சதவீதம் வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடொன்று இல்லாதிருந்ததுடன் கொடுப்பனவு செய்யப்படுகையிலும் அத்தகைய உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட அளவீட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவக உத்தியோகத்தர்களின் அறிவையும் திறனையும் விருத்தி செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், புலமைப் பரிசில் மற்றும் செயலமர்வுகளுக்கு 2011 ஆம் ஆண்டு வரை செலவிடப்பட்டிருந்த ரூபா 21,618,551 தொகையான பணம் மீளாய்வாண்டிலிருந்து எதிர்வரும் 5 ஆண்டுகளின் பங்கிலாபத்திலிருந்து பதிவழிப்பதற்கு கணக்காளர் தீர்மானித்திருந்தார். இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பங்கிலாபத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்த

ரூபா 4,323,710 தொகைக்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2:1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 17,157,210 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 13,009,737 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 4,147,473 தொகையான வீழ்ச்சிக்காக ரூபா 4,323,710 தொகையான ஊழியர் அபிவிருத்திச் செலவினம் மீளாய்வாண்டின் பங்கிலாபத்திற்கு எதிராக பதிவழித்தல் காரணமாகி இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான நிதிசார் விளைவுகளின் பல்வேறு கட்டங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது | | முரண் | |
|---|---|---|---|---|
| | 2012 | 2011 | சாதகமானவை | பாதகமானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 146,524,455 | 131,248,013 | 15,276,442 | - |
| செலவினம் (நிதிச் செலவினம் தவிர்ந்தவை) | 163,641,109 | 144,234,499 | - | 19,406,610 |
| வட்டி செலுத்த முன்னர் தேறிய செயற்பாட்டு இலாபம் | 17,116,655 | 12,986,487 | 4,130,168 | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | 27,682,892 | 31,458,276 | - | 3,775,384 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 17,729,112 | 15,563,590 | - | 2,165,522 |

## 3. செயற்பாடு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் 38 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது 07 செயற்திட்டங்கள் உள்ளடங்கலாக 45 செயற்திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின் போது இவற்றில் 30 செயற்திட்டங்கள் பூர்த்தியடைந்திருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது 02 செயற்திட்டங்களும் 2012 ஆம் ஆண்டின் போது 13 செயற்திட்டங்களும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் ஆரம்பத்தில் வழங்குனர்கள் பதிவு செய்யப்படுகையில் தகமைகள் பரிசீலிக்கப்படாது மாத்தறையில் அமைந்துள்ள வாகன கராஜ் ஒன்று வழங்குனராகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. வாகனங்களை அந்த வாகன கராஜிற்கு அனுப்புவதற்கும் மீள கொண்டுவருவதற்குமாக மேலதிகக் கிரயமொன்றை ஏற்க வேண்டியிருந்தது.

(ஆ) தற்போது நிறுவகத்தின் சேவையில் இல்லாத 10 உத்தியோகத்தர்களால் மீள ஒப்படைக்கப்பட்டிராத 187 நூலகப் புத்தகங்களின் பெறுமதி அவர்களிடமிருந்து அறவிடப்பட முடியாதிருந்ததுடன் காணாமற் போயிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 163 ஆகும்.

(இ) 2012 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 மே 10 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2011 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட 162 வகைப் பொருட்களின் பற்றாக்குறையும் மிகையும் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பு பாடநெறிகளைப் பின்பற்றி உடன்படிக்கைகளை மீறிய 06 புலமைப்பரிசில் தாரர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு 32 – 63 மாதங்கள் வரையான கால தாமதத்தையடுத்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட காரணத்தால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பிணை முறிகளின் பெறுமதி ரூபா 11,900,868 ஆகக் காணப்பட்டது.

(உ) நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட முன்னர் பதிவாளர், உதவிப் பதிவாளர் (நிகழ்ச்சித்திட்டம்) மற்றும் ஒருங்கிணைப்பாளர் போன்ற நிறுவகத்தின் பிரதான பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் இரண்டு வருடங்களுக்கு மேலான காலமாக பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2012 பெப்ரவரி 06 ஆம் திகதி ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரும் இவ்வெற்றிடம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உள்நாட்டுப் பட்டப்பின்படிப்பை தொடர்வதற்காக இரு உத்தியோகத்தர்களுக்கு 2006 ஆம் ஆண்டின் போது சம்பளத்துடன் 02 ஆண்டு காலம் கல்வி விடுமுறையும் ரூபா 1,874,757 தொகையான பாடநெறிக் கட்டணமும் நிறுவகத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்கள் உரிய பாடநெறிகளை குறித்த காலப்பகுதியின் போது பூர்த்திசெய்திருக்கவில்லை. நிறுவகத்தினால் பாடநெறியின் காலப்பகுதி 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பாடநெறியின் போது உரிய பாடநெறியைப் பூர்த்திசெய்வதற்கு உத்தியோகத்தரால் முடியாதிருந்தது.

## 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

வெளி நிறுவகங்களால் நிதியீட்டப்பட்ட ஆராய்ச்சிச் செயற்திட்டங்களும் 25 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் பூர்த்தியடைந்ததை அடுத்து செலவிடப்படாது எஞ்சியிருந்த ரூபா 9,286,136 தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோராகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சிற்றுண்டிச் சாலையின் வாயுவிற்காக செலவிடப்படும் செலவைக் குறைக்கும் நோக்கில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாது ரூபா 636,690 தொகையான செலவில் உயிரியல் வாயுச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட உயிரியல் வாயுவின் அளவு உற்பத்தி செய்யப்பட்டிராமையால் செயற்திட்டம் முற்றாக வெற்றியளிக்காது காணப்பட்டது.

## 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

வரிசை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிறுவகத்தின் வாகனம் மீளாய்வாண்டின் போது விபத்திற்குள்ளாகி ரூபா 230,700 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது. இந் நட்டம் தொடர்பாக நி.பி. 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சட்டரீதியாக உரிமை அற்ற சொத்துக்கள்

உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சொந்தமான கெப் வாகனம் 2011 யூலை 25 ஆம் திகதி நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாகனத்தின் சட்டபூர்வ உரித்து ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 வேறு அரசாங்க நிறுவகங்கங்களிற்கு வழங்கப்பட்டிருந்த சபையின் வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவகத்திற்குச் சொந்தமான இரு வாகனங்கள் 2012 ஏப்ரல் 26 ஆம் திகதி வரிசை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மீள பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் ஒரு சாரதி 2011 ஆகஸ்ட் 27 ஆம் திகதி முதல் வரிசை அமைச்சில் இணைப்புச் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக ரூபா 247,580 தொகை நிறுவகத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.8 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி நிறுவகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கு அவசியமான தகமைகளைப் பூர்த்திசெய்திருந்த வெளிவாரி விண்ணப்பதாரிகள் இருக்கையில் ஆகக் குறைந்த தகமைகளையேனும் கொண்டிராத நிறுவகத்தின் உள்ளக விண்ணப்பதாரி ஒருவர் உரிய பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) 2012 பெப்ரவரி 06 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிறுவகத்தின் பணிப்பாளரினதும் கணக்காளரினதும் சம்பள அளவு திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது பணிப்பாளரினாலும் கணக்காளரினாலும் முறையே ரூபா 132,310 தொகையும் ரூபா 42,210 தொகையுமாக ரூபா 174,520 கூட்டுத்தொகையான சம்பளம் மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்ஆளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிறகான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்கும் இடையேயான முரண்கள் 22% முதல் 111% வரையான வீச்சினைக் கொண்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வாகனப் பழுதுபார்த்தல்களும் பராமரிப்பும்

(ஆ) நிர்மாணிப்பு நடவடிக்கைகள்

(இ) ஆளணி நிர்வாகம்

(ஈ) முற்பணக் கொடுப்பனவுகள்

(உ) பதிவேட்டுப் பொருள் கட்டுப்பாடு